# சமாதானப் பேச்சு; மகாநாயக்கர்களுக்கு- சந்திரிகா விளக்கம்

(கொழும்பு)
நாட்டில் சமாதானத்தை வேண்டி ஆசிகள் பெறும் முகமாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை மகாநாயக்க தேரர்களை சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதியுடன் அமைச்சர்கள், அதிகாரிகள் பலர் சென்றதாகவும். அவர்களுடன் நீண்ட நேரமாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது. அரசின் சமாதான முயற்சிகள் குறித்து ஜனாதிபதி அங்கு விளக்கிக் கூறினார்.

கண்டி விஜேராம விகாரையில் நடைபெற்ற இந்தச் சந்

(6ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 5 இதழ் 349
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19-1-1995

## ஓரிரு தினங்களில்! கண்காணிப்புக் குழு யாழ். வரும்

(கொழும்பு)
வடபகுதியில் மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் குழுத் தலைவர் அடுத்த ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளார்.

மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் குழுவைச் சேர்ந்த கனேடிய, நெதர்லாந்து நாட்டவர்கள் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும் அரச படைக

(6ம் பக்கம் பார்க்க)

## ★ அரசு - புலிகளுக்கிடையில்

# நாலாம் கட்டப் பேச்சுக்கள் மாத இறுதியில் நடைபெறும்?

## - அல்லது அடுத்த மாத முற்பகுதியில் -

[கொழும்பு]
விடுதலைப் புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்குமிடையிலான 4ம் கட்ட பேச்சுக்கள் பெரும்பாலும் இந்த மாத பிற்பகுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென 'டெய்லி நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா வீட்டில் வெடிமருந்து இருக்கவில்லை

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வீட்டில் பிளாஸ்டிக் வெடிமருந்துப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கள் தேக்கமடைய இரு விடயங்களே காரணம்

### — அமைச்சர் கதிர்காமர்

(கொழும்பு)
அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தேக்கநிலை அடைவதற்கு இரு பிரச்னைகள் காரணமாக இருப்பதாகவும், இவை விரைவில் தீர்க்கப்பட்டுவிடும் எனத் தாங்கள் நம்புவதாகவும் வெளிவிலகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இதனைத் தெரிவித்த திரு. கதிர்காமர் மேலும் கூறுகையில்:

(6-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த மதகுரு தீக்குளிப்பார்?

[கொழும்பு]
பௌத்த மதம் தொடர்பாக தவறுக தமது நூலில் எழுதியதை, நீக்காது பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டால் தாம் தீக்குளிக்கப் போவதாக ஒரு பௌத்த மத குரு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தென் பகுதியில் உள்ள விகாராதிபதியான இவர் பாப்பரசரின் இலங்கை விஜயத்தை கடுமையாக எதிர்த்துள்ளதுடன் பாப்பரசர் தமது கருத்துக்கு மன்னிப்பு கோர வேண்டும் எனவும் கூறியுள்ளார்,

இதைவிடுத்து அவர் இலங்கை வந்தால் தனக்கு தானே தீமூட்டி தீக்குளிக்கப் போவதாகவும் அவர் எச்சரித்துள்ளார். [கே - சி]

## கிளாலி பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி பூநகரி படகுச் சேவை செவ்வாய், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் காலை 8 மணி முதல் காலை 10 மணி வரையும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் நடைபெறும். இதேவேளை திங்கள், வியாழக்கிழமைகளில் காலை 8 மணி முதல் காலை 10 மணி வரை மட்டுமே இப் படகு சேவை நடைபெறுமென விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (சி)

## ★ வடபகுதியில் இடம்பெயர்ந்தவர்களுக்கு 2,000 ரூபா வழங்கப்படும்

(கொழும்பு)
வடக்கில் இடம்பெயர்ந்துள்ளவர்களில் 25 முதல் 50 வீதமானவர்களுக்கு, புனர்வாழ்வு புனரமைப்பு உதவி வழங்குவதற்கு அவசர உதவித் தொகையாக இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாக வடபகுதிக்கான அவசரப் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்ட அறிக்கை தெரிவித்துள்ளன.

அந்த அறிக்கை மேலும்

(6ம் பக்கம் பார்க்க)

## பாப்பரசர் வருகை 15,000 பொலிஸார் இன்று ஒத்திகை

(கொழும்பு)
நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு வரவுள்ள பாப்பரசரை வரவேற்கும் உத்தியோக பூர்வ வைபவம் ஜனாதிபதி வளவில் நடைபெறவுள்ளது.

சனிக்கிழமை மாலை பாப்பரசரை வழியனுப்பி வைக்கும் வைபவம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடைபெறும்.

(6-ம பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடலில் கொந்தளிப்பு படகுகள் கவிழ்ந்ததில் மீனவர் பலரைக் காணவில்லை

(நெல்லியடி)
கடலில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக பருத்தித்துறைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் இயந்திரப் படகுகள் இரண்டு கடலில் கவிழ்ந்ததால் படகில் சென்ற பல மீனவர்களும் படகுகளும் காணமல் போய்விட்டதாகவும் இதுவரை கரைக்கு வந்து சேரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நேற்றுக்காலை 11-30 மணியளவில் பருத்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

மணியம்தோட்டத்திற்கும் ஆஸ்பத்திரி வீதியிலிருக்கும் பெட்டிக்கடைக்குமிடையில் சொப்பிங் பாக்குடன் முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுப்பு வைத்திலிங்கம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பெட்டிக் கடையில் அல்லது 149, 5-ம் குறுக்கு மணியம் தோட்டம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி1376)


## இன்று

(யாழ்ப்பாணம்)

இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க புதிய அலுவலக கட்டிட திறப்பு விழாவும், கடற்றொழிலாளர் ஓய்வூதிய சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று 19ம் திகதி வியாழன் மாலை 3 மணிக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. பா. சந்திரகுமார் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும், கௌரவ விருந்தினராக அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வனும் கலந்துகொள்வார்கள்.

## கண் சிகிச்சை கிளினிக்

(நெல்லியடி)

யாழ். போதனா வைத்திய சாலையின் கண் வைத்திய நிபுணர் டாக்டர் திரு. குகதாசனினால் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நாளை 20-ம் திகதி கண் சிகிச்சை கிளினிக் நடைபெறவிருக்கின்றது.

மாதத்தில் இருதினங்களில் இக்கண்சிகிச்சைக் கிளினிக் நடைபெறவிருப்பதாகவும், கண் பார்வை குறைந்தநோயாளிகள் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறைமாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். -160

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை - கோம்பையன் மயான பரிபாலன சபையின் பொதுக்கூட்டம் இம்மாதம் 29-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நீராவியடி நாவலர் ஆசிரம மண்டபத்தில் நடைபெறும், -ம

## முட்டை விலை வீழ்ச்சி

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் பண்டிகை காலங்களில் 10 ரூபா வரை விற்று வந்த முட்டை தற்பொழுது 5 ரூபாவாகக் குறைந்துள்ளது, பெருமளவு முட்டைகள் விற்பனைக்கு வந்துள்ளதாக தெரிய வருகிறது, -59

## வெங்காயம் திருட்டு

(அரியாலை)

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து கைதடியில் வசித்து வந்த மக்களின் வெங்காயத் தோட்டத்திலுள்ள வெங்காயப் பாத்திகளிலிருந்து இரவு திருடப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த 16-ந் திகதி இரவு நடைபெறதாக தெரியவருகின்றது. -59

அமரர் கி. ஆ. பெ. அவர்கள்

# தமிழீழ போராட்டம் பற்றி உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்

புதுவை புகழஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழனுக்கு ஒரு நாடு என்றால் அது தமிழீழமே தவிர தமிழ்நாடு அல்ல என்று அழுத்தம் திருத்தமாக அடித்துக்கூறி தமிழீழப் போராட்டம் பற்றி சர்வதேச சமூகத்துக்கு அறிமுகப்படுத்திய பெரியார் கி. ஆ. பெ. விஸ்வநாதம்.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்களின் நினைவு நாள் விழாவுக்குத் தலைமைதாங்கி உரையாற்றிய விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தனது தலைமையுரையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலய திறந்த வெளியரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; நீண்டகாலமாக எமக்கும் இந்தியத் தமிழகத்துக்கும் இடையில் நெருங்கிய உறவு இருந்து வந்தது, தமிழகத்திலுள்ள அறிஞர் பெருமக்கள், பெரியார்கள் அரசியல்வாதிகள் எம்முடன் இணைந்து செயல்பட்டு வந்தார்கள். எம்முடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார்கள். முன்னைய காலங்களில் தமிழ்நாடு அறிஞர்கள் பெரியார்கள் தமிழைப் பற்றியும், தமிழீழம் பற்றியும் குரலெழுப்பி வந்தார்கள். இந்தப் பெரியார்கள் இன்று இல்லை. இவர்கள் மறைந்து விட்டார்கள். இன்று தமிழகத்தில் இருக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி வருகிறார்கள். எமது உரிமைப்போராட்டத்திற்கு எதிரிகளாக மாறியுள்ளார்கள்.

முத்தமிழ்க் காவலர் விஸ்வநாதம் தமது இறுதிக்காலம் வரை தமிழுக்காகவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்காகவும தன்னை அர்ப்பணித்து வந்தார். அத்துடன் தமிழரின் பாரம்பரிய சித்த மருத்துவத் துறையை விரிவுபடுத்திவதில் ஆர்வம் காட்டி வந்தார்.

கடந்த 2000 ஆண்டுகளில் தம்பி பிரபாகரனைப் போல ஒரு நல்ல நிதானமான தலைவர்கள் ஒருவரும் பிறக்கவில்லை. தம்பி பிரபாகரனின் தமிழீழப் போராட்டத்துக்கு பணபலம் கிடையாது. படைபலம் இல்லை. ஆகவே உலகில் வாழும் அனைத்து தமிழ் மக்களும் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு சகல வகைகளிலும் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தவர் திரு, விஸ்வநாதம் அவர்கள்,

இன்றைய நிலையில் தமிழீழம் நினைவுகூரும் அறிஞர்கள் இறந்துவிட்டார்கள், இன்றைய அறிஞர்கள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் எமது தமிழீழ போராட்டத்துக்கு எதிரான கருத்துக்களை கூறு வருகிறார்கள். எமது போராட்டத்தைக் கொச்சைபடுத்தி வருகிறார்கள். தமிழுக்காக வாழ்பவர்கள் ஒரு சிலரே. தமிழைச் சார்ந்து வாழ்பவர்கள் பலர். இந்த வகையில் தமிழுக்காகவும், தமிழனுக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் முத்தமிழ்காவலர் திரு. விஸ்வநாதம் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்விழாவில் பல அறிஞர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. -162-ரி

# குடிநீர் விநியோகம் துஷ்பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றம் யாழ். நகர்ப்புறங்களில் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்கும் முகமாக வழங்கிவரும் குடிநீர் விநியோகம் சில இடங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

சில பகுதிகளில் குழாய் மூலம் பெறும் நீரை, வீடுகளிலுள்ள பூங்கன்றுகளுக்குப் பாவிப்பதாகவும், சில இடங்களில் உடுப்புக்கள் தோய்ப்பதற்குப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பொம்மைவெளி சிறுவர் போஷாக்குப் பூங்காவுக்கு அண்மையில் அமைந்திருக்கும் குடிநீர்க் குழாய் பழுதடைந்துள்ளது. இக்குழாயிலிருந்து எந்நேரமும் நீர் வெளியேறிக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

குழாய் மூலம் குடிநீர் பெறும் பாவனையாளர்கள் இவற்றைச் சரியாகப் பேணிப் பாதுகாத்து வருவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 162-சி

பாதுகாப்பு கூடுகள்

# பனம் மட்டைக்குப் பதிலாக இரும்பு கம்பிவலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்புறங்களில் நாட்டப்பட்டுவரும் பயன்தரு மரக் கன்றுகள் கால்நடைகளால் அழிக்கப்படாது பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் பனம் மட்டையிலான பாதுகாப்புக் கூடுகள் விஷமிகளால் அபகரித்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகராட்சி மன்றம, நகரத்தின் பல்வேறு பகுதிகளிலும் நாட்டிய மரக் கன்றுகளைப் பாதுகாப்பதற்காகப் பாதுகாப்புக் கூடுகளைப் பனம் மட்டைகளால் அமைத்திருந்தது.

இப்பாதுகாப்புக் கூடுகள் விறகுத் தேவைகளுக்காக விஷமிகளால் அகற்றி செல்லப்பட்டு வந்தது.

இதனைத் தொடர்ந்து, யாழ். மாநகராட்சி மன்றம் பனம் மட்டைகளுக்குப் பதிலாக, இரும்புக் கம்பிகளாலும், கம்பி வலைகளாலும் உருவமைக்கப்பட்ட பாதுகாப்புக் கூடுகளை இப்பொழுது பல்வேறு பகுதிகளிலும்வைத்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. -162


## Service of an Engineer

Applications are invited from suitable qualified Engineer for Training in Germany (1 month) for installation and maintenance of X' Ray Equipment provided under German Aid. The applicants should hand over their applications personally before 9 a. m. on 23-01-1995 at the Office.

The Secretary
JAFFNA GENERAL HOSPITAL,
DEVELOPMENT ASSOCIATION.
(A-4707)


விசா முடிவடைந்த

# 8,600 வெளிநாட்டவரை பிரான்ஸ் அரசு நாடுகடத்தியது

## 44,400 பேர் தேடப்படுகிறார்கள்

[பாரிஸ்]

பிரான்ஸ் வீதிகளில் நடமாடும் வெளிநாட்டவர்கள் அடிக்கடி சோதனை செய்யப்பட்டு விசா முடிந்தவர்கள் நீதிமன்றம் முன் கொண்டு செல்லப்படுகின்றார்கள்.

பிரான்ஸில் புதிதாக அமுலுக்கு வந்துள்ள சட்டத்தின் பிரகாரம் விசா முடிவடைந்த பின்னரும் பிரான்ஸில் வாழ்பவருக்கு 500 பிராங் தொடக்கம் 5000 பிராங்குகள் அபராதம் அல்லது 3 மாதம் முதல் மூன்று வருடம்வரை சிறைத்தண்டனை வழங்க முடியும்.

53,000 பேர் நாட்டை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ள போதிலும் அனேகமானோர் நாட்டுக்குள்ளேயே தலைமறைவாக வாழ்வதாக கூறப்படுகிறது. இவர்களில் 8,600 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர். ஏனையோரைக் கண்டுபிடிப்பதற்காக பொலிசார் வீதி வீதியாகச் சோதனை நடாத்தி வருகிறார்கள்.

அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களை கைது செய்யப்படும் பட்சத்தில் ஒரு மாதகால அவகாசம் வழங்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறுமாறு பணிக்கப்படுகிறார்கள். இக்காலத்தில் நிர்வாகம் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் தமது வெளியேற்ற உத்தரவை ஆட்சேபித்து மனுத் தாக்கல் செய்யலாம். நான்கு மாதத்துள் இதற்கான தீர்ப்பு வந்துவிடும்.

இத்தீர்ப்பிலும் விசா நிராகரிக்கப்பட்டால் இவ்விதமானவர்களை கைதுசெய்து நாடு கடத்த பிரான்ஸ் சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலனவர்கள் மீண்டும் மீண்டும் அகதிகள் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கிறார்கள். அதனை அவர்கள் நிராகரித்தாலும் 'கொமிஷன்' என்ற அகதிகளின் அப்பீல் நீதிமன்றத்திற்கு மனுச் செய்யலாம், இவ்விதமாக காலத்தை கடத்திவந்தாலும் விசா முடிந்தவர்களை கைதுசெய்து பொலிசார் நாடுகடத்தி வருகிறார்கள்.

வெளிநாட்டவர்களின் வருகையை கட்டுப்படுத்தும்நோக்குடன் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றிதரவில்லையாம். நாடு கடத்தப்பட வேண்டிய ஆயிரக்கணக்கானோர் தற்போது நாட்டிற்குள் தலைமறைவாகிவிட்டதாகவும் பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது. -சி


பாசமிகு இல்ல விளக்கின்.....அணைந்த

## ஈராண்டு நினைவலைகள்

தோற்றம் : 03 | 11 | 1959



மறைவு : 14 | 01 | 1993

அமரர்

## சிவபாதம் செல்வம்

திதி : 19 – 01 – 1995

குடும்பத்தின் ஒளி விளக்கே !
அன்பான மைந்தா, ஆருயிர் அண்ணா !
நெஞ்சில் நிறைகுடமாய் உறைந்த எம் தெய்வம்
33 ஆண்டுகளில் எம்மைப் பரிதவிக்கவிட்டு
விண்ணகம் சென்றாயே !

உன் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், தங்கையர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

83/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1377)

# பாப்பரசரின் வருகையால் இலங்கை மண் புனிதமடையும்

உலகில் வாழும் 95 கோடி கத்தோலிக்க மக்களின் ஆன்மிகத்தலைவரான பரிசுத்த பாப்பரசர் 2-வது அருளப்பர் சின்னப்பர் நாளை 20-ம் திகதி இலங்கை வருகிருர்,

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்க மக்கள் மத்தியில் 24 வருடங்கள் அரும்பெரும் பணியாற்றிய ஜோசப்வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பட்டம் வழங்குவதற்காகவே பரிசுத்த பாப்பரசர் இலங்கை வருகிருர்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் யேசுநாதர் தனக்குப்பின்பு தனது போதனைகளை உலகெங்கும் பரவச் செய்வதற்கு சத்திய திருச்சபையை ஏற்படுத்திஞர். புனித இராயப்பர்தான் கத்தோலிககத் திருச்சபையின் முதலாவது தலைவர். இவர் தான் முதலாவது பரிசுத்த பாப்பரசா என்றும் வேதாகமம் கூறுகின்றது,

கத்தோலிக்கத் திருச்சபை இதுவரை 263 பாப்பரசர்களைக் கண்டுவிட்டது. தற்போதைய பரிசுத்த பாப்பரசர் 2-வது அருளப்பர் சின்னப்பர் 264 வது பாப்பரசர்

கத்தோலிக்கத் திருச்சபையின் பாப்பரசர் பதவி மிகவும் புனிதமானது. உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவராக அவர் பூசிக்கப்பட்டு வருகின்ருர். மதிப்புக்கும் கௌரவத்துக்கு முரியவராகப் போற்றப் பட்டுவருகின்ருர். கிறிஸ்தவக் கோட்பாட்டில் இவரின்முடிவு இறுதியானதும் உறுதியானதும் கூட.

பாப்பரசர் புனித இராயப்பரின் வாரிசு என்றும், யேசுநாதரின் பிரதிநிதி என்றும் அனைவராலும் அழைக்கப்படுகின்ருர். புனித இராயப்பரை யேசுநாதர் முதலாவது பாப்பரசராக நியமித்தபோது, ''நீ ஒரு பாறை. இந்தப் பாறையின்மீது என் திருச்சபையைக் கட்டுவேன்'' என்று கூறிஞர்,

தற்போதைய புனித பாப்பரசரின் பெயர், கரோல்வைற்றிலா. இவர் கம்யூனிஸ நாடான போலந்து நாட்டைச் சேர்ந்தவர் கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாற்றில் ஒரு கம்யூனிஸ நாட்டைச் சேர்ந்த முதலாவது பாப்பரசரும் இவர்தான் 16ம் நூற்றுண்டுக்குப்பின்னர், இத்தாலி நாட்டுக்கு வெளியே தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பாப்பரசரும் இவர் தான்.

தேவா

போலந்து நாட்டின் வடகோல்ஸ் என்றசிறிய கிராமத்தில் 1920ம ஆண்டு மே மாதம் 18 ம் திகதி பாப்பரசர் பிறந்தார். 2-வது உலகமகா யுத்தத்தின்போது மாணவனுக இருந்த பாப்பரசர் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு தவித்தார். வறுமையைப் போக்குவதற்காக இவர் கல் உடைத்தார். சுண்ணும்புச் சூளையில் சுண்ணும்பு சுமந்தார். 1941 ம் ஆண்டு இவரின் தந்தையார் இறந்ததும் பாப்பரசர் அனுதையானுர். இக்காலகட்டத்தில்தான் மிகவும் ரகசியமாக இயங்கிவந்த குருமடத்தில் சேர்ந்து கொண்டார்.

1946 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ம் திகதி குருத்துவப் பட்டம் பெற்ருர். 1958 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் திகதி ஆயர் ஆனுர், அடுத்தாண்டு பேராயரானுர் 1967-ம் ஆண்டு யூன் மாதம் 26ம் திகதிகருதினலாகவும்பட்டம் பெற்ருர். இறுதியாக 1978 ஆம்ஆண்டு ஒக்டோபர் மாதம் 16-ம் திகதி கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த பாப்பரசரானுர். அப்போது தான் 2 வது அருளப்பர் சின்னப்பர் என்ற பெயரையும் பெற்ருர்.

இலங்கைக்கு பாப்பரசர் ஒருவர் விஜயம்செய்வது இது இரண்டாவதுதடவையாகும். 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ம் திகதி பாப்பரசர் 6-வது சின்னப்பர் இலங்கைக்கு வந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மூன்று மணித்தியாலயங்கள் மட்டும் தங்கிநின்று திருப்பலிப் பூசையை ஒப்புக்கொடுத்து விட்டுத் திரும்பிச் சென்ருர்.

1970-ம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த பாப்பரசர் 6-வது சின்னப்பரை தற்போதைய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவே அப்போதும்பிரதமராக இருந்து விமான நிலையம் சென்று வரவேற்ருர். ஆனல் தற்போதுவரும் பாப்பரசர் 2 வது அருளப்பர் சின்னப்பரை பிரதமர் ஸ்ரீமாவோவின் மகளான ஜனுதிபதி திருமதி சந்திரிகா வரவேற்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய பாப்பரசர் 2-வது அருளப்பர் சின்னப்பர் அவர் செல்லும் நாடு முழுவதிலும் அமைதிக்காகவும் சமாதானத்துக்காகவும் மக்களின் ஒற்றுமைக்காகவும் ஓயாது குரல் கொடுத்து வருகின்ருர். அநீதி ஒழிந்து. நீதி தழைக்க இவர் பாடுபடுகின்ருர். பரிசுத்த பாப்பரசரின் திருவடிகள் எந்த நாட்டின் மண்ணில் பதிந்தாலும் அந்த நாட்டின் மண் புனிதமடையும்! விசி

# அமைச்சரவையில் உடனடியாக மாற்றம் செய்யப்படாது

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றம் விரைவில் நடைபெறமாட்டாதென அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாண்டு ஆரம்பத்தில் பெரும்பாலும் அமைச்சரவை மாற்றம இடம்பெறலாமென முதலில் எதிர்பார்க்கப்பட்ட போதும் அவ்வாருனதொரு மாற்றத்தை தற்போது மேற்கொள்ள ஜனுதிபதி சந்திரிகா விரும்பவில்லையாம்.

இதேவேளை தற்போதைய அமைச்சரவையிலுள்ள சிலர் ஜனுதிபதி சந்திரிகாவின் போக்கு குறித்து விமர்சித்துள்ளதாகவும் இவர்கள் ஜனுதிபதியை பகிரங்கமாக விமர்சிக்கும் சூழ்நிலை கூட உருவாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கல்வி அமைச்சர் பதவியிலிருந்து திரு. ரிச்சாட் பத்திரனவை மாற்றுமாறு சந்திரிகா கட்சியைச் சேர்ந்த இளம் உறுப்பினர்கள் ஜனுதிபதியை கேட்டுள்ளதாகவும் அண்மையில் காலி மாவட்டத்தில் பாடசாலை அதிபர் தொடர்பாக நீதிமன்றம் வரை சென்ற விவகாரத்தையும் தமது கோரிக்கையில் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனராம்.

எனினும் அதனை ஏற்றுக் கொள்ள திருமதி சந்திரிகா மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# “பனைவளத்தின்மேம்பாட்டிற்கு பல திட்டம் உருவாக்குவோம்”

புதிய தலைவர் திடசங்கற்பம்

]யாழ்ப்பாணம்[

''ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் தேயிலை, இறப்பர், தென்னை போன்று பனையும் முக்கிய இடம்பெறவேண்டும். பனை அபிவிருத்திச் சபைக்குக் கூடுதலான நிதியை ]ஒதுக்குவதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்த முடியும். என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. எம். பாக்கியதாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:- பனை வளம் தமிழினத்தின் வாழ்க்கையுடன் இணைந்துள்ள முக்கியமான வளமாகும. பனை அபிவிருத்திச் சபை இவ்வளத்தை மேம்படுத்துவதில் புதிய பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளது.

பனையை நம்பி வாழும் பல்லாயிரக்கணர்கான மக்களின் பாரிய பொருளாதார வளமாக விளங்கும் பனை உலகளாவிய ரீதியில் இன்று பெருமை பெற்றுள்ளது. தேயிலை, இறப்பர் போன்ற பயிர்ச்செய்கை அபிவிருத்திகளுக்குக் கடந்த காலங்களில் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனல் முககிய வளமான பனை வளத்திற்கு மிகவும் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டு வந்தது.

பனை அபிவிருத்திக்கெனக் கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். இதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களின் முக்கிய பொருளாதார வளத்தை மேம்படுத்தமுடியும். தேயிலை, தென்னை, இறப்பர் போன்று பனையும் இந்நாட்டு ஏற்றுமதிப் பயிர்களில் ஒன்ருக திகழ நாம் ஒன்றுபட்டுழைக்கவேண்டும். இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான பனையை நம்பி வாழும்தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வு செழிக்கும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

-162-ரி

இரணவிலவில்

# ஆயிரம் ஏக்கர் காணி அரசு சுவீகரிப்பு

(கொழும்பு)

இரணவிலவில் வொய்ஸ் ஒப் அமெரிக்க நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியில் அரசாங்கம் சுமார் ஆயிரம் ஏக்கரை சுவீகரிக்கவிருக்கிறது.

இந்தக் காணிகள் அந்தப் பகுதியில் காணியற்ற மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று விவசாய காணி வனவயல் அமைச்சர் டி.] எம். ஜெயரத்ன தெரிவித்தார்.

சுவீகரிப்பு உடன்படிக்கை கடந்த வாரம் கைச்சாத்திடப் பட்டது என்றும் இப்பொழுது அந்த நிலையத்திற்கு நானூறு ஏக்கரே விடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

-ரி

# பிராந்திய நிர்வாகமுறை சீரமைப்பு நடவடிக்கை

(உடுவில்)

பிராந்திய நிர்வாக முறையை சீரமைப்பு செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக தெரியவருகின்றது.

பிரதேச செயலர்கள் பொறுப்பில் வரும் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் நடவடிக்கைகளை மாவட்ட செயலாளர்கள் ஒழுங்கமைக்கவுள்ளனர். மாவட்டச் செயலாளர்கள் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைளில், நிர்வாகமுறைகளுக்கு தேவையான நிதி உதவிகள் வழங்கப்படவும் உள்ளதாக தெரியவருகிறது.

கிராம அதிகாரிகளின் செயற்பாடுகளை பிரதேச செயலாளர்கள் கண்காணிக்கவும், அவர்களை மாவட்டங்களுக்கிடையே இடமாற்றம் செய்வதை மாவட்ட செயலாளர்கள் மேற்கொள்வர் எனவும் தெரியவருகின்றது.

.109

# பங்களாதேஷ் பிரதமர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அழைப்பின் பேரில் பங்களாதேஷ் பிரதம மந்திரி பேகம் காளிதாஷியா 25-ம் திகதி இரண்டு நாள் விஜயத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

பங்களதேஷ் பிரதமர் என்ற முறையிலும் 'சார்க்' அமைப்பின் தலைவர் என்ற முறையிலும் இலங்கை வரும் பிரதமருடன் வேறு சில அமைச்சர்களும் வருகை தரவுள்ளனர். பங்காளதேஷ் பிரதமர் ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா ரணில் விக்கிரமசிங்கஆகியோரையும் இந்த விஜயத்தின் போது சந்தித்து உரையாடுவார். (கே-ரி)

# சிறுவர்களுக்கு சத்துணவுத் திட்டம்

(பருத்தித்துறை]

பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் போஷாக்கு குறைந்த சிறுவர்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தை பருத்தித்துறை பிரதேசசபை மேற்கொண்டு வருகின்றது. பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் பருத்தித்துறை சத்துணவுக் கூடத்தின் சத்துணவு வகைகளே இத்திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலை சிறுவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

நிறுவனங்களின் உதவிகள் குறைந்த பாலர்பாடசாலைகளில் உள்ள போஷாக்கு குறைந்த சிறுவர்களை இனங்கண்டு அவர்களின் போஷாக்கு நிலையை உயர்த்தும் நோக்குடனேயே இத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

அண்மையில் பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் எஸ். செவ்வந்திநாதர் பாலர் பாடசாலைகளில் சத்துணவு வழங்கும் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

(52-இ)

போராளி கலைஞன் வசந்தனின்

# மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் இயக்க போராளி வசந்தனின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 21-ம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு, நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வரங்கேற்ற நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு ப. தமிழ்ச்செல்வன் முதன்மை விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத் தலைவர் சபா ஜெயராசா கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் சி. மகேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்னர்

மங்கள விளக்கினை யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பருதி ஏற்றிவைப்பார். சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அதிபர் கா- சந்திரபாலன் வரவேற்புரையையும், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி. வணபிதா பிரான்ஸிஸ்யோசப் அடிகள் ஆகியோர் வாழ்த்துரைகளையும், இன்னிசை வேந்தர் பொன். சுத்தரலிங்கம் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர்,

தொடர்ந்து, செல்வன்வசந்தன் இதர அணி செய் கலைஞர்களுடன் இணைந்து வழங்கும் இசையரங்க நிகழ்வுஇடம் பெறும். செல்வன் வசந்தன் சங்கீதரத்தினம் மா. சிதம்பரநாதனின் மாணவனுவார். -சி

# "எமது மக்களை பலம் பொருந்திய நிலைக்கு நாம் உயர்த்த வேண்டும்"

## கிளிநொச்சி ஆய்வு பட்டறையில் கருத்து

(யாழ்ப்பாணம்)

''இன்று எமது மக்கள் உயிருடமைகளை இழந்தாலும் கூட மனோபாவமுள்ள வாழ்வை நல்ல முறையில் ஒழுங்கமைத்து செல்லக்கூடிய ஒரு செயற்பாட்டினை நாங்கள் அனைவருமாக அரசியல் சூழ்நிலைக்குக் கீழே உறுதிப்படுத்தியிருக்கின்றோம். அந்த வகையில் எங்களை எதிர்நோக்கியிருக்கிற இந்தப் புனரமைப்புப் பணிகளிலே நாங்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு மத்தியிலே எவ்வாறு திட்டமிடல் நடவடிக்கைகளின் ஊடாக மக்களை மேலும் ஒரு பலம் பொருந்திய சமூக நிலைக்கு உயர்த்த வேண்டுமென்ற எங்களுடைய அரசியல் தலைவர்களுடைய வேணவாவை மக்களின் வேணவாவின் அடிப்படையிலேயேதான் நாங்கள் எந்தத் திட்டமிடலையும் தீட்ட வேண்டிய கடமைப்பாடு உடையவர்களாக இருக்கின்றோம்.

கிளிநொச்சி திட்டப்பணிப்பாளர் திரு. இராசநாயகம் கிளிநொச்சி மதிய கல்லூரியில் அரச திணைக்களங்கள், ஆச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடாத்திய அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணலின் கூட்டம் இரண்டுக்கான ஆய்வுப்பட்டறையின் நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரையாற்றும் போது கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், எங்களுக்கும் நிரந்தரமான ஒரு அரசியல் விடுதலையைப் பெற்றுக் கொடுக்கின்ற அதேவேளை பொருளாதார விடுதலைக்காக அறிந்தவைகளை நாங்கள் நல்ல முறையில் திட்டமிட்டு செயல்படுத்தாதுவிட்டால் நிச்சயமாக வருங்கால சமூகம் எங்களை ஒரு குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தித்தான் பார்க்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்று தெரிவித்தார்.

வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு, நீகன் சிறப்புரையாற்றும போது கூறியதாவது: இன்று அரசாங்கத்தினுடைய அனர்த்தங்கள் என்ற அம்சத்துக்குள் அடங்கும் பொருளாதாரத் தடையினால் எங்களுடைய மண்ணிலே இருந்த வளங்கள் ஒழ்வொன்றும் இன்று வெளிவந்திருக்கின்றன. இந்த அனர்த்தங்கள் ஒவ்வொன்றும் எமது மக்களை மண்ணிலே சுதந்திரமாக சொந்தக் கால்களில் வாழ்வதற்கு வழிவகுத்திருக்கிறது.

இந்நிகழ்வில் தமிழீழ நிர்வாக தேவையைச் சேர்ந்த திரு. ஐங்கரன் உரையாற்றும் போது, இன்று எமது போராட்டம் எவ்வாறு வளர்ச்சி அடைகின்றதோ அதே போல் ஏனைய துறைகளும் இங்கு வளர்ச்சி அடையவேண்டும் என்ற நோக்கத்துக்காக எமதுதேசிய தலைவர் இங்கு பல துறைகளாகப் பிரித்து படை நகர்த்திக் கொண்டிருக்கிறார் என்று கூறினார்.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி உரையாற்றுகையில்: எங்களுடைய மக்களையும், எங்களுடைய மண்ணையும் உயர்த்திவிடுகின்ற பொறுப்பு எங்களுடைய ஒவ்வொருவரின் கையிலும் தான் இருக்கிறது என்றும் இதை நாங்கள் ஒவ்வொருவரும் ஆழமாக உள்வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு அரசாங்க அதிபரும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்த ஆய்வுப் பட்டறையில் உரையாற்றிய பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத் திட்ட முகாமையாளர் திரு. சிவபாதசுந்தரம் உரையாற்றும்போது கூறியதாவது:

1990-ம் ஆண்டு சிறிலங்கா அரசு கைத்தொழில் மையங்களை நிறுவி அதன் பகுதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தேசிய அபிவிருத்தி வங்கியூடாக பல கோடி ரூபாவை நிதி ஒழுங்கு செய்துள்ளது. இவற்றைவிட இலங்கை அபிவிருத்திக் கூட்டுத்தாபனமும் பலகோடிகடனாக அறவீடு செய்துள்ளது. இவற்றுக்கு மேலாக வர்த்தக வங்கிகளும் கடனாக வழங்கியுள்ளன. இதை பார்க்கும் போது எமது பிரதேசத்திற்கென எதுவும் ஒதுக்கப்படவில்லை, எமது பிரதேசத்திற்கென கைத்தொழில் அளவீடு நிறுவுவது மிகவும் அவசியமாகத் தெரிகிறது. சிறிலங்காவின் ஏனைய பகுதிகளினூடாக கைத்தொழில் ஆராய்ச்சி நிலையம், றப்பர் ஆராய்ச்சி நிலையம், தேசிய ஆராய்ச்சி நிலையம் மூலப் பொருள் ஆய்வு நிறுவனம், கைத் தொழில் அபிவிருத்தி சபை போன்ற ஆராய்ச்சி நிலையங்கள் கைத்தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகஇருப்பினும் வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு இவர்களின் சேவை கிடைக்கவில்லை என்றே சொல்லலாம். இதனைக் கருத்திற்கொண்டு வடக்கு-கிழக்கு பிரதேசங்களை நாமே அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியமாகின்றது.

அவர் தொடர்ந்து கருத்துரை வழங்கும் போது; எம்மிடையே உள்ள மூலவளங்கள், மனித வளங்கள், துறைசார் பீடங்கள், நிபுணத்துவம் அனைத்தையும் ஒன்றிணைத்து எமது பகுதியை அபிவிருத்தி செய்யவேண்டும். தேவையேற்படின் வெளிநாட்டில் இருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்துஇப்பிரதேசசேவையை பூர்த்திசெய்யலாம். அத்தோடு உணவு பதனிடுவதற்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்று வடக்கு கிழக்கு பிரதேசத்திற்கென அமைக்கப்படவேண்டியது அவசியமாகின்றது. இதே போல் கைத்தொழில் அதிகார சபையும் இப்பிரதேசத்திற்கென அமைக்கப்பட வேண்டுமெனவும் கூறினார்.

கிளிநொச்சி விவசாயபீடாதிபதி கலாநிதி அ. நவரட்ணராசா இந்த ஆய்வு பட்டறையில் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

இன்று நாம் முக்கியமாக வட தமிழீழத்தைப் பொறுத்தவரை சில திட்டங்களை முன்வைக்க வேண்டியுள்ளது. அதன் பின்னே நாங்கள் ஒவ்வொரு திட்டங்களையும் தொழில் நுட்ப ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் நாங்கள் முன்வைக்கிறோம். முன்வைக்கவேண்டும். ஏன் என்றால் எமது மக்களுக்கு பொருளாதாரத்தையும் அவர்களுக்கு வாழ்க்கைத்தரத்தையும் கூட்டுவதற்காக நாங்கள் எடுக்க வேண்டியமுதல் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். அது மட்டுமே இன்று ஒவ்வொரு தர திட்டங்களும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு அந்த விஞ்ஞான ரீதியையும், தொழில் நுட்ப ரீதியை பகிரங்கப்படுத்தி அத்திட்டத்தால் கடைசியாக மக்கள்தான் பயன்பெறவேண்டும்.

# இராணுவ வன்செயல்களினால் 5லட்சம் சிறுவர்கள் அகதிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு பகுதிகளில் கடந்த காலங்களில் இடம் பெற்ற இராணுவ வன்செயல்களினால் ஐந்து லட்சம் சிறுவர்கள் அகதிகளாகியுள்ளனர் என்று சிறுவர் உரிமை அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

பதினொரு தொண்டர் நிறுவனங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்ட சிறுவர் உரிமை அமைப்பு ஒன்றே மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

1990-ம் ஆண்டில் பின் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் இடம்பெற்ற இராணுவ வன்செயல்களினால் இந்த ஐந்து லட்சம் சிறுவர்களும் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இராணுவதாக்குதல்மற்றும் மருத்துவ பொருட்கள், தடைகளினால் மேற்குறித்த பகுதிகளில் குறிப்பிட்ட காலத்தில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு நடத்தப்பட்ட இராணுவ ஒடுக்கு முறைகளினால் கிழக்கு மாகாணத்திலே பெரும் பாதிப்பு ஏற்படுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -ரி

# உலகவங்கி ஆலோசனைகளுக்கு எதிராக கண்டனக் கூட்டம்!

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு உலக வங்கி நிபுணர்கள் வழங்கிய ஆலோசனைகளைக் கண்டித்தும் எதிர்ப்பு தெரிவித்தும் கொழும்பில் ஊர்வலமும் நுகேகொடையில் கண்டனக் கூட்டமும் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய பலரும் உலகவங்கியின் நடவடிக்கைகளைக் கண்டித்து உரையாற்றினர்.

தேசிய காணி விவசாய புனர்வாழ்வு இயக்கம் இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வாசுதேவ நாணயக்காரா கூறியதாவது: பதினேழு வருடகால ஊழல்களுக்கு முடிவு கட்டி ஆக்கபூர்வமான சமூக அமைப்பொன்றை உருவாக்குவதற்கென இந்த நாட்டு மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு வாக்களித்தார்கள்.

தற்போதைய அரசாங்கம் வீழ்ச்சியடையுமானால் ஊழலும் வன்செயலும் மீண்டும் தலைதூக்கும்எனவே இந்தஅரசாங்கத்தைப் பாதுகாப்பது

மக்களின் கடமை என்றுகூறிய அவர் கிராமப்புற மக்கள்மீது தாக்கம் ஏற்படாத வகையில் நாட்டின் பொருளாதாரக் கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்.

நாட்டின் நலனுக்கான திட்டங்களை தயாரிக்குமாறு உலக வங்கி வற்புறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய கலாநிதி விக்கிரமபாகு கருணரத்ன, முன்னைநாள் அரசாங்கத்தின் கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்ளாததால் அந்த அரசாங்கம் நிராகரிக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

தறபோதைய அரசாங்கம் அதன் தேர்தல் வாக்குறுதிகளை மறந்துவிட முயற்சி செய்வதால் அரசாங்கம்மீது வற்புறுத்தல்களை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

சர்வதேச கூட்டுறவு இயக்கத்தின் பிலிப்பைன்ஸ் பிரதிநிதி மேரீன் பெனுசியஸ் பேசியபோது'' உலகின் பல நாடுகளை நெருக்கடிக்குள் கொண்டுவர உலகவங்கி பாடுபட்டுள்ளது என்றும் உலகவங்கியின் நெருக்கடி காரணமாக பிலிப்பைன்ஸ் அரசாங்கம் மூவாயிரத்து நானூறு கோடி அமெரிக்க டொலர் கடனில் மூழ்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

முன்னதாக விவசாயிகள் கலந்து கொண்ட ஊர்வலமொன்று கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி நுகேகொடையில் கூட்டம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றது. -ரி

பிரிட்டனுக்குள் அகதிகளாக

# இலங்கைத் தமிழர் என கூறி இந்தியதமிழர் நுழைகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டனில் தற்போது அரசியல் தஞ்சம் கோருபவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு வருகின்ற அதேவேளை இலங்கைத் தமிழரின் பெயரில் இந்தியத் தமிழர்கள் நூற்றுக்கணக்கானோர் பிரிட்டனுக்குள் நுழைந்து கொண்டிருக்கிறார்களாம்.

இதற்கு ஒத்தாசையாக இலங்கைத் தமிழரும் உதவிபுரிந்து அவர்களுக்கு தேவையான போலி பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களையும் பெற்றுக் கொடுப்பதில் ஈடுபட்டுள்ளனராம்.

பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் திருட்டுத்தனமாக பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் மற்றும் அடையாள அட்டைகளை விநியோகித்து வரும் பேர்வழிகள் மீது தற்போது பொலிஸாரின் கவனம் திரும்பியுள்ளது. இவ்விதம் போலி பத்திரங்களை பெற்றுக்கொடுக்க 2000 முதல் 4000 பவுணகளை சில இலங்கைத்தமிழர்கள் பெற்றுவருகிறார்களாம்,

இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் துன்பங்களை கருத்தில் கொண்டு பிரிட்டன் அரசு தற்காலிக அனுமதி வழங்கும் இவ்வேளையில் இந்தியத்தமிழரும் இதனைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபடுவதை தமிழ் அகதிகளுக்கு உதவும் நிறுவனங்களின் கவனத்துக்குங்கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரை வெளியேற்றும் நடவடிக்கைகளில் பிரிட்டன் அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தியத் தமிழரின் இவ்வித போக்கு இலங்கை அகதிகளுக்குமேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இவ்வித மோசடிக்கு உடந்தையாக இருப்போர் விபரங்களை தமிழ் அமைப்புகள் சேகரித்து வருகின்றன. -சி

தமிழாராய்ச்சி மாநாட்டில்

# ஈழத் தமிழ் அறிஞர்கள் அவமதிப்புக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தஞ்சாவூரில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் ஈழத்தமிழ் அறிஞர்களை திட்டமிட்டு தமிழக அரசு அவமதிப்பு செய்துள்ளதை அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம் கண்டித்திருக்கிறதென்று இதன் தலைவர் சிவஸ்ரீ தியாகசோமாஸ்கந்த குருக்கள்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'ஈழத் தமிழறிஞர்களான பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் இம் மாதம் 1ம் திகதி தஞ்சாவூரில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதி வழங்காமையைகண்டிக்கிறோம்.

ஆக்க அறிவியல் சிந்தனை விமர்சனங்களில் ஈழத் தமிழர்கள் குறைந்தவர்கள் அல்லர். அப்படியிருந்தும் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்குச் செல்லத் தகுதியற்றவர்களும் அல்லர். எம்மையும் எம் இனத்தையும் இழிவு செய்யும் கீழ்த்தரமான போக்குடைய இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் அரசியல் முத்திரை குத்தும் தமிழாராய்ச்சி மாநாட்டை தமக்காகவே நடத்தியமை நாம் அறிய முடிகிறது. இச்செயல் வேதனைக்குரியதும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்'' என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரி

# தமிழீழத்தின் மாநிலங்கள் இருபதாக வகுக்கப்பட்டுள்ளது

[கிளிநொச்சி]

நகர அபிவிருத்தியென்ற கட்டட சூழலில் நகர அபிவிருத்தியென்ற நோக்கில் அதன் நிர்வாக பிரதேச எல்லைகளை நிர்ணயிப்பதும் சகல வடிவங்களை அடையாளம் காண்பதும் அன்றி நகரில் அமைய வேண்டிய கட்டட சூழல் சம்பந்தமாக நிர்வாக வலயங்களில் ஏற்படுத்திக் கொள்வதும் மிகவும் அவசியமானதாகும்.

இவ்வாறு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடாத்திய 'அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணலின் ஆய்வுப்பட்டறை' நிகழ்வில் 'நகர அபிவிருத்தியும் அரச துறை சேவைகளின் கட்டிடங்களும்' என்ற தலைப்பில் கட்டிடக்கலைஞர் திரு. ஜெயலிங்கம் உரையாற்றுகையில கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்: அவ்வகையில் ஏறக்குறைய தன்னாட்சி கொண்ட தமிழீழப் பிரதேசத்தில் பிரதான நகரங்களின் அமைவிடங்கள் குறித்த நோக்கில் அவை நகராக்கம்-நிர்வாக சேவை கருதி பகுதி ரீதியாக பின்வருமாறு தொழிற்படுத்தப்படலாம்.

தேசிய தலைநகரம், முதல் நிலை நகரம், பிரதேச தலைநகரம், இரண்டாம்நிலை நகரங்கள் என்பனவும் மாநில நகர மையங்கள் மூன்றும் நிலை நகரங்கள் என்பனவாகும் இவற்றைவிட அடுத்த சட்டங்களாக பட்டினங்கள்' கிராமங்கள் அமையலாம். இதில் தேசிய தலைநகராக திருகோணமலையும், பிரதேச தலைநகரங்களாக வடதமிழீழத்தில் மாங்குளமும்' தென்தமிழீழத்தில் கரடியனாறும் அடையாளம் காணப்பட்டன.

தமிழீழத்தின் மொத்த மாநிலங்கள் 20 ஆக வகுக்கப்பட்டு அவற்றிற்குரிய பெயரும் முன்மொழியப்பட்டன. தறபோதைய நிர்வாக மாவட்டங்களின் பரப்பளவு, உத்தேசிக்கப்பட்ட மாநிலங்களின் பரப்பளவு நிகராக தற்போதைய உதவி அரசாங்கஅதிபர் பரப்பளவை விட கூடியதாகவும் உத்தேசிக்கப்பட்ட மாநில பரப்பளவு இணைந்திருக்கும் என்றும் கூறினர்.

## மணிவாக்கு

தேளுக்கு விஷம் வாலிலும், நாகத்திற்கு விஷம் அதன் பல்லில் மாத்திரமுண்டு. ஆனல் மனிதனுக்கு விஷம் அவனது தேகம் முழுவதும் இருக்கின்றது. அவனுடைய கண்களிலும், நாவிலும், மனத்திலும், புத்தியிலும், நடையிலும், மூளையிலும் ஏன் எல்லா அங்கங்களிலுமே விஷம் இருக்கின்றது.

- சத்தியசாயிபாபா

## நமது நோக்கு

### மீளக் குடியேறல்!

சென்ற பல ஆண்டுகளாக மக்கள் பல வேதனைகளைத் தாங்கி வந்துள்ளார்கள். எனவே அமைதிச் சூழல் விரைவாக ஏற்பட வேண்டுமென ஆவல்படுவது புதினமல்ல.

குறிப்பாக - இடம் பெயர்ந்த மக்கள் தமது மண்ணிற்கு மீண்டும் சென்று குடியேறி விவசாயம், மீன்பிடி போன்ற சுயமுயற்சிகளை ஆரம்பிக்கவே விரும்புவார்கள்.

பிறர்மீது தங்கியிருக்காது சொந்தக் காலில் நின்று தன்மானத்தோடு வாழவே விரும்புவர்.

இடம் பெயர்ந்தவர்களால் நாட்டின் பொருளாதாரம் பல்வேறு வழிகளாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை அரசு உணராமல் இருக்கிறதா?

உற்பத்தி முயற்சிகளுக்கு உதவ வேண்டிய மனிதவளம் அகதிமுகாம்களிலா முடங்கிப் போயிருக்க வேண்டும்?

உணவுற்பத்தி பாதிக்கப்பட்டதால் உணவுப் பொருட்களின் இறக்குமதிச் செலவுகள் அதிகரித்து வருவதை அரசு வெளியிடும் புள்ளிவிபரங்களே தெளிவாக்குகின்றன.

அத்தோடு - நிவாரணப் பணிகளுக்கென அரசு செலவிடும் பணம் உற்பத்தி முயற்சிகளுக்குத் திருப்பி விடுவதால் ஏற்படும் பொருளாதார நன்மைகளை அரசு உணராமல் இல்லை.

எனவே தான் - மீளக் குடியேற்றம்பற்றி அரசு அவசரமும், அக்கறையும் காட்டி வருகின்றது.

ஆனல் - உடனடியான சில நிவாரணங்களைக் காட்டி, போதிய பாதுகாப்பில்லாது குடியேற்றி விட்டால் பிரச்னை தீர்ந்து விடுமா?

வேதனைகள் தொடர்ந்தால் சிக்கல்கள் மேலும் அதிகரிக்குமல்லவா?

மக்கள் கௌரவமான முறையில், தாம் அடிமைகளாக நடத்தப்படவில்லை, பாரபட்சமாக நடத்தப்படவில்லை என்ற உணர்வோடு மீண்டும் வாழ்வு தொடங்குவது அவசியம்.

அதற்கேற்ற வகையில் தீர்வுகளும் தீர்மானங்களும் அவசியம்.

## புலதும் பத்தும்

### அறுசுவை

மகிழ்ச்சியான நிகழ்ச்சியா? உடனே இனிப்பு! அதனல் உள்ளம் மாத்திரமா உடலும் பூரிப்படைந்து விடுமாம்! இனிப்புச் சுவையால் தசைகள் வளர்ந்து...... அவலட்சணமும் வளர ஏதுவாகிவிடும்!

கசப்பைக் கண்டதும் முகம் சுழிக்கின்றோம். ஆனல் உடலுக்கு உதவாத கிருமிகளைக் கசப்பு நீக்குமாம். காரமோ வெப்பத்தைக் கொடுக்கும்; உணர்ச்சிகளைக் கூட்டும்; சில வேளைகளிற் குறைத்து விடும்! புளிப்போ இரத்தக் குழாய்களின் அழுக்குகளைப் போக்க உதவும்.

காயமேற்பட்டு இரத்தம் கசிவதைத் தடுத்து உறைய வைக்கத் துவர்ப்பு உதவுகிறது. ''உட்பை விடு!'' எனச் சில நோயாளருக்கு எச்சரிக்கை! ஆனல் அதை மறுப்பதேன்? ஞாபக சக்தியை வளர்க்கும் பொருட்களில் உப்பும் ஒன்று.

தமது உடல் நிலைக்கேற்ப அறுசுவைகளின் அளவு அமைய வேண்டாமோ?

— மயூரன்

## இராசி பலன்

19-1-1995

வியாழக்கிழமை

(தமிழுக்கு தை 05)

திருதியை பின்னிரவு 3-14 வரை, மகம் காலை 6-34வரை, அமிர்தசித்தயோகம், இராகு காலம் மாலை 2-05 முதல் 3-35 வரை, சுபவேளை காலை 8-05 முதல் 9-35 வரை.

மேடம்: கஷ்டஜீவனம், தொழில்மந்தம், அலைச்சல்.
இடபம்: நம்பிக்கையீனம். கடிததொல்லை. அவமதிப்பு.
மிதுனம்: குடும்ப மகிழ்ச்சி, போட்டியில் ஜெயித்தல், பணவரவு.
கடகம்: மனச்சங்கடம், மாமனர் வன்மம், விரோதம்.
சிங்கம்: தொழில்சிறப்பு, நண்பர் சகவாசம், விருந்துண்ணல்.
கன்னி: பெற்ருேர் கண்டிப்பு: கடன் வரவு. பயணம்.
துலாம்: இனிய செய்தி, அதிகாரிகள் உதவி, காரிய சித்தி.
விருச்சிகம்: அயலவர்உதவி, குடும்ப சுகம், முயற்சி பலிதம்.
தனுசு: தாழ்ந்த நிலை. இனசனபகை மனச் சஞ்சலம்.
மகரம்: ஒதுங்கிப்போதல், எதிர்பாராத துன்பம், மனச்சுமை.
கும்பம்: கலந்து பேசுதல், நினைத்ததைச் சாதித்தல், கலகலப்பு.
மீனம்: அதிக பிரகாசம். குழந்தைப் பாசம், நிர்ப்பந்தம்.

ஜோஸ்யர்

# சலரோகத்தினல் பத்தாண்டில் 3 கோடி பேர் உயிரிழப்பர்

(கொழும்பு)

சலரோகம் கட்டுப்படுத்த முடியாத ஒரு நோயாககாணப்படுகிறது என்றும் இந்த பத்தாண்டு காலப்பகுதியில் சுமார் மூன்று கோடி மக்கள் சலரோகத்தினல் உயிரிழக்கலாம் என்றும் ஆய்வுஅறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் சலரோகப் பிரச்னை உக்கிரமடைந்துள்ளது என்றும் உலக சுகாதார நிறுவனமும் அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு நிறுவனங்களும் தெரிவித்துள்ளன.

எய்ட்ஸ் நோய் உள்ளவர்களிடம் இலகுவாக தொற்றுக் கொள்ளும் சலரோகம் தடுப்பு மருந்துக்கு எதிர்த்து நிற்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது என்றும அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரபராமரிப்பு குறைந்துள்ள நாடுகளில் சலரோகம் கட்டுப்பாடின்றி பரவி வருகிறது. புதிதாக பரவும் இந்த நோய் 95 வீதமானது வளர்முக நாடுகளிலே காணப்படுகிறது.

ஆபிரிக்காவிலும் மற்றும் தென் கிழக்காசியாவிலும் மிகக்கூடுதலாக சலரோகம் பரவுகிறது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. - ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-01-19

வியாழன் இரவு

08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 சித்தமருத்துவக் குறிப்புகள்
08-20 உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் 'கழுவிய உப்பு' - குறு நாடகம்
08-30 செய்திகள்
08-40 தாயகப் பாடல்கள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1995-01-20

வெள்ளி காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப்பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-01-19

வியாழன் மாலை

05-00 ஒலிபரப்பு ஆரம்பம்
05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 இசையும் கதையும் நிகழ்ச்சியில் 'துயரங்கள்'
06-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
06-02 பொன் விளையும் பூமி உணரவேண்டும்' நாடகம்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 விளையாட்டு சம்பந்தமான கேள்வி பதில்
06-25 என் தெரிவு
06-30 மாலை ஒலிபரப்பு யாவும் நிறைவு பெறும்.

# போராடும் மாணவருடன் அரசு பேச்சு நடத்தாது

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் அடிக்கடி இடம்பெற்ற போராட்டங்களில் பங்குபற்றி முறைகேடாக நடந்த மாணவர்களுடன் அரசாங்கம் எந்தவித பேச்சுவார்த்தையும் வைத்துக் கொள்ளாது என்று தெரிவித்துள்ளது.

மொறட்டுவ பல்கலைக்கழகம் களனி பல்கலைக்கழகம்போன்ற பல்கலைக்கழகங்களிலே இந்த வித சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது என்று 'லங்காதீப' தெரிவித்துள்ளது. ம-ரி

# பாரிஸ் ஹோட்டலில் வேலை செய்த சந்திரிகா

(கொழும்பு)

ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்க பாரிஸில் கல்விகற்றுக் கொண்டிருந்தபோது தன் மேலதிக செலவுகளுக்காக உணவு விடுதியில் எடுபிடி வேலைசெய்து கூட்டி துடைத்து கோப்பைகள் கழுவினர் என வண. டாக்டர் வல்பொல ராகுல தேரோ தெரிவித்துள்ளார்:

பாரிஸில் படிக்கும் போது சந்திரிகா மிக எளிமையும் அடக்கமும் கொண்ட பெண்ணுகவே விளங்கினர். அவர் தான் கொழும்பிலுள்ள செல்வாக்கு மிக்க பிரபுத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று எப்போதும் எவரிடமும் குறிப்பிட்டதில்லை. இதற்கு மாருக உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்துள்ள ஏனைய சாதாரண மாணவர்களுடன் சகஜமாக பழகினர். பிராங்கோ பிரிட்டானிக விடுதியில்வசித்துவந்த சந்திரிகா நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவ்விடுதியின் உணவுச்சாலையில் சுத்தப்படுத்தல், கழுவுதல் போன்ற சிறு சிறுதொட்டாட்டு வேலைகளைச் செய்வார். இதனல் அவருக்கு இலவச உணவும் மேலதிக வருமானமும் கிடைத்தது. இவை தவிர பல்கலைக்கழகத்தின் உள்ளும் புறமும் நடந்த மாணவர் போராட்டங்களிலும் அவர் முன்னணியில் நின்ருர் என்றும் டாக்டர் வல்பொல ராகுல தேரோ மேலும் தெரிவித்தார். -ரி

பங்களாதேஷ்

# ரெயில் விபத்தில் 150 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் அண்மையில் நடந்த ரயில் விபத்தில் 150க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. 500க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஜிலாத்பூர் மாவட்டத்தில் ஒரு மலைப்பகுதி ரயில் நிலையத்தில் இரண்டு ரெயில் வண்டிகள் மோதி இந்த விபத்துக் நேர்ந்தது, உள்ளூர் பிரயாணிகள் ரயிலுடன் கடுகதி புகைவண்டி ஒன்று மோதிக் கொண்டதால் கடும் சேதம் ஏற்பட்டது, -கே-சி

வீட்டுத் தோட்டம் செய்திடு உன்
நோட்டுச் செலவைக் குறைத்திடு

# சமாதான முயற்சிகளில் இராணுவத்திற்கு சந்தேகம்

## எதிராகவும் பிரசாரம்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளைக் குழப்பும் விதத்தில். இராணுவத்தினர் தமது வானொலி மூலம் பிரசாரம் செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் காட்டவில்லை என்றும், மீண்டும் ஒரு யுத்தத்திற்குத் தயாராகும் வகையில் காவலரண்களை அமைத்து, தம்மைப் பலப்படுத்தி வருவதாகவும் இராணுவம் பிரசாரம் செய்து வருகிறது.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இராணுவத்தினரின் இந்தப் பிரசாரம் சமாதானத்தைக் குழப்பும் விதத்திலும், சமாதான முயற்சிகளில், படையினர் சந்தேகம் கொண்டிருப்பதையுமே காட்டுவதாக அவதானிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை கிழக்கில் படையினரின் வழமையான சோதனை நடவடிச்கைகள் தொடர்கின்ற போதும், மோதல் தவிர்ப்பு தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

---

# பாப்பரசரைத் தரிசிக்கச் சென்றவர்களை புகைப்படம் எடுத்த பின்பே கொழும்பு செல்ல அனுமதி

(வவுனியா)

பாப்பரசரை தரிசிப்பதற்காகக் செல்லும் யாழ். பக்தர்கள், வவுனியாவில்வைத்து நேற்றுப் படையினர் தனித்தனியாகப் புகைப்படம் எடுத்த பின்னரே அப்பால் செல்ல அனுமதித்தனர்.

கிளாலி ஊடாக நேற்றுக் காலை பயணம் செய்து வவுனியா சென்றடைந்த 500 பயணிகளை வவுனியாவில் வைத்து இராணுவத்தினர் தமது வழமையான சோதனைக்கு உட்படுத்தியதுடன், அவர்களைத் தனித்தனியாகப் புகைப்படம் எடுத்தனர்.

இதேவேளை பாப்பரசரைத் தரிசிப்பதற்குக் கொழும்பு செல்பவர்களைத் தவிர சாதாரண பயணிகளை வவுனியாவுக்குள் நேற்றுப் படையினர் அனுமதிக்கவில்லையாம். இன்றும் சாதாரண பயணிகளை வவுனியாவுக்குள் அனுமதிக்க மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று பாப்பரசரை தரிசிக்கும் யாழ்ப்பாணத்தவர்கள், 22, 23ம் திகதிகளில் திரும்பி வரவுள்ளதால் அத்தினங்களிலும் வவுனியா ஊடாகச் சாதாரண பயணிகள் செல்வதற்கும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் படையினர் கூறியுள்ளனராம். -சி

---

# பௌத்த - கிறிஸ்தவ கலவரம் தெற்கில் தோன்றும் அபாயம்

(கொழும்பு)

பாப்பரசரின் இலங்கை விஜயத்தையொட்டி பௌத்த மத தீவிரவாதிகள் பௌத்தகிறிஸ்தவ மத கலவரத்தை தூண்டிவிடலாம் என பல்வேறு தரப்பினரும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதனால் கிறிஸ்தவ மத தேவாலயங்களுக்கு பொலிஸாரின் விசேட பாதுகாப்பு வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த விகாரைகளில் கலவரத்தை தூண்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்ற சந்தேகத்தில் பொலிசார் அவற்றில் தீவிர கவனத்தை செலுத்தி வருகின்றனர்.

பௌத்த மதம் பற்றி பாப்பரசர் தெரிவித்த கருத்துகளுக்காக அவர் மன்னிப்பு கோரவேண்டுமென பௌத்த பிக்குகளும், பௌத்தர்களும் கோரிவருவதும் தெரிந்ததே. (கே-சி)

---

### பாப்பரசர் வருகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாப்பரசரின் விஜயத்தை முன்னிட்டு நேற்று முதல் கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைக்கு வந்துள்ளன, இது தொடர்பாக இன்று நடைபெறவுள்ள ஒத்திகையில் 15 ஆயிரம் பொலிசார் கலந்து கொள்வார்கள். பாப்பரசருக்கும் அவரது குழுவினருக்கும் அதிகளவு பாதுகாப்பை வழங்குவதற்காக பல பிரதி பொலிஸ்மா அதிபர்கள் பொறுப்பாக இருக்கிறார்கள். இந்த நடவடிக்கைகளுக்கு கூட்டு பொறுப்பாளராக சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நெவில் குணரட்ண கடமையாற்றுகிறார்.

இதேவேளை பாப்பரசரின் விஜயத்தை முன்னிட்டு பல சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

மரண தண்டனை வழங்கப்பட்டவர்கள் ஆயுள் தண்டனையை பெறுவார்கள். இவை பாப்பரசர் வெள்ளிக்கிழமை வரும்போது நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (கே-சி)

### ஓரிரு தினங்களில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் குழுக்களுக்கு தலைமை தாங்குவார்கள்.

நெதர்லாந்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான லெப். கேணல் போல் அன்றிஸ்கொட் லிங்கே யாழ்ப்பாணம் மன்னார் பிராந்திய குழுவுக்கு தலைமை தாங்குவார், இவர் மத்திய கிழக்கிலும் அங்கோலாவிலும், பொஸ்னியாவிலும் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் அனுபவமுள்ளவர். இவரே யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

முல்லைத்தீவு வவுனியா பிராந்திய குழுவுக்கு கனடாவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் பீனற் நிர்ரே தலைமை தாங்குவார், இவர் கனேடிய ஆயுத படைகளில் முக்கிய பதவிகளை வகித்தவர். சைபிரஸிலும் மத்திய கிழக்கிலும் ஐ. நா, சபையின் அமைதி காக்கும் நடவடிக்கையில்அனுபவம் பெற்றவர்,

திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும், அம்பாறையிலும், நோர்வே அவதானிகள் தலைமையில் இரண்டு கண்காணிப்பு குழுக்கள், கடந்த வாரம் முதல் செயல்பட்டு வருவதும் தெரிந்ததே. (கே-சி)

### அரசு—புலிகளுக்கிடையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நான்காம் கட்ட பேச்சுக்களில் முக்கியமாக மூன்று விடயங்கள் இடம் பெறுமென்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். குடாவிற்கான தரைவழிப்பாதை பொருளதார தடை நீக்கம், அரசியல்பேச்சுக்களை தொடங்கும் திகதி நிர்ணயம் ஆகிய மூன்று விடயங்களுக்கும் தீர்வு காணப்படவில்லை என்பதும் தெரிந்ததே.

அரசாங்கத்தின் புனர்வாழ்வு அபிவிருத்தி திட்டத்திற்கு பதிலாக சம்மதம் தெரிவிக்கும் வகையில், புலிகள் தரப்பால் 35 ஆயிரம் கோடி ரூபா அபிவிருத்தி திட்டமொன்று அரசாங்க பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதில் முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயங்களும் குறிப்பிடப் பட்டிருப்பதாக அப்பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கே-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-

---

# உயர்தர மாணவர்களுக்கு விஞ—விடைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் வருடாவருடம் நடத்தபபடும் பாடசாலை உயர்தர விஞ்ஞான மாணவர்களுக்கான இறுதி நாள் நிகழ்வு, யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 21ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணி முதல் நடைபெறும்.

இறுதி நாள் நிகழ்வில், கடந்த 7ம் திகதி மாவட்ட ரீதியாக நடைபெற்ற எழுத்துப் பரீட்ஸையில் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கான வாய்மொழி விஞ விடைப் போட்டியும், மாவட்ட ரீதியிலான விஞ்ஞான பேச்சுப் போட்டியும் இடம் பெறும்.

இந்நிகழ்வினை வலயம் 2, கல்விப் பணிப்பாளர் திரு. பி. கந்தசாமி தொடக்கி வைப்பார். பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்களையும், மாணவர்களையும் இந்நிகழ்வில் பார்வையாளராகக் கலந்து கொண்டு பயன்பெறுமாறு, யாழ்ப்பாண விஞ்ஞான சங்க உதவிப் பொதுச் செயலாளர் கலாநிதி சி. ஸ்ரீசற்குணராசா கேட்டுக்கொள்கிறார். -சி

### நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நேற்றுப் பிற்பகல் நடைபெற இருந்த யாழ்ப்பாணம் பொம்மைவெளி சிறுவர் போஷாக்குப் பராமரிப்புப் பூங்கா 2ம் ஆண்டு நிறைவு நாள் விழா மழைகாரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

இவ்விழா நாளை 20ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (162-சி)

### சமாதானப் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திப்பில், அமரபுர மகாநாயக்காவின் தலைவர் வணக்கத்துக்குரிய பஞ்ஞாக மகாநாயக்க தேரர். நிக்காயாவின் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பௌத்த பிக்குகள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் ஆராயப்பட்டது. ம-சி

### பேச்சுக்கள் தேக்கமடைய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துப் பாதை திறப்பதும், கடல்வலயத் தடைச் சட்டம் தொடர்பான விடயங்களிலேயே சில பிரச்னைகள் எழுந்துள்ளன. இவற்றைத் தீர்த்து வைக்கமுடியும் என நம்புகின்றோம்.

போக்குவரத்திற்காகப் பூநகரி மற்றும் ஆனையிறவுப் பாதையையும் திறக்க அரசு விரும்புகிறது. பாதை திறப்பு விடயத்தில், பூநகரி படைமுகாம் முற்ருக அகற்றப்பட வேண்டும் என வலியுத்தி வருகின்றனர். இப்பிரச்னைக்கும் தீர்வு காணப்படும்.

மேலும் இனப் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணமுடியும் என அரசு நம்புகின்றது. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 4,000 கோடி ரூபா வரையிலான திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவுள்ளது. இதற்குத் தேவையான நிதியில் பெரும் பகுதி வெளிநாட்டு உதவிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் சுமுகநிலை ஏற்பட்டதும் இத்திட்டத்தை அரசு முழுமையாக அமுல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார். -சி

### வடபகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகையில்: இத்திட்டத்திற்கமைய யாழ்ப்பாணத்தில் 45,000 குடும்பங்களுக்கும், கிளிநொச்சி, மன்னாரில் 7,500 குடும்பங்களுக்கும், முல்லைத்தீவில் 15,000 குடும்பங்களுக்கும், வவுனியாவில் 3,000 குடும்பங்களுக்கும் இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் விவசாய, வர்த்தக. மீன்பிடித்துறைக்கு 20 கோடி ரூபா கடன் வழங்கவும் அரசு முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட 1,500 பேர் இருக்கிறார்கள். மரணம், காயம் போன்ற பாதிப்புக்குள்ளானவர்களுக்குத் தலா 50,000ம் ரூபா வீதம் வழங்கப்படும். அரசாங்க ஊழியர்கள் 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

தற்போது வடமாகாணத்தில் 90,000 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இந்தக் குடும்பங்களில் 3,67,161 பேர் இருக்கின்றனர். இவர்கள் 242 சேமநிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாக அந்த அறிக்கை தெரிவித்துள்ளது. -சி

### சந்திரிகா வீட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனதிபதிசெயலகம் மேலும் தெரிவித்ததாவது: படையினர் ஒருவர் அலரிமாளிகைக்கு வந்த போது அவரை முன் வாசலில் வைத்துப் பரிசோதித்த போது அவரிடம் இருந்து 300 கிராம் இரசாயனப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இந்த இரசாயன பொருளை இவர் தமது வெள்ளவாயா படைமுகாமிலிருந்து களவாக எடுத்துள்ளார் சிலாபம் மீனவர்களுக்கு இதை விற்பதற்கு எடுத்து வந்தார்என்று விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

இவர் வெள்ளவாயா கமோண்டோப் பிரிவைச் சேர்ந்தவர். விசாரணைகள் மேலும் தொடர்கிறது. என்று பாதுபாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. ம-சி

### வடமராட்சிக் கடலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தித்துறையில் சுப்பர்மடம் கடற்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வழமையாக தொழிலுக்குப் புறப்பட்ட மீனவர்களே இவ்விதம் காணமல் போயுள்ளனர். நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த கொட்டும் மழையாலும் கடற்கொந்தளிப்பாலுமே இவர்களது படகுகள் கவிழ்ந்து போயுள்ளன. காங்கேசன்துறையிலிருந்து இடம் பெயர்ந்து சுப்பர் மடத்தில் வசித்து வரும் சுப்பையா ரவி (வயது 30) என்னும் மீனவர் மயக்கம் அடைந்த நிலையில் கடலில் இருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் நால்வர் ஒருவாறு நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்,

இதே இடத்தைச் சேர்ந்த சின்னராசா சிவபாதம் ஆகியோரது படகுகளே கடலில் கவிழ்ந்தன, இதனல், பல லட்சம் ரூபா பெறுமதியான படகும் உடமைகளும் கடலில் நாசமாகின. இவற்றில் ஒரு படகு வேறு மீனவரின் உதவியுடன் ஒருவாறு கரைக்கு எடுத்து வரப்பட்டது. மற்றைய படகு, தாழமுக்கம் அதிகரிப்பினல் அங்கிருந்து மீட்கப்படவில்லை.

இப்படகுகளில் வந்த பல மீனவர்கள் தெய்வாதீனமாக நீந்திக் கரை சேர்ந்தனர். எனினும் இன்னும் நான்கு படகுகள் பற்றியும் அதில் சென்ற மீனவர் பற்றியும், எதுவும் தெரியவில்லை. இப்படகுகளையும் மீனவர்களையும் காணது அவர்களது உறவினர்கள் கொட்டும் மழையில் கரையில் காத்திருந்தனர். (160-சி)